# தேவனுடைய பெயர் என்ன?

"God" என்பது (கடவுள்) ஆராதனைக்குரிய ஒரு பொருள் என்று அர்த்தப்படுகின்றது. அவ்வார்த்தையே (GOD என்று) பெரிய எழுத்துக்களில் எழுதப்படும் பொழுது, அது ஒரே மெய்யான ஜீவனுள்ள தேவனைக் குறிப்பிடுகின்றது. மற்றவர்கள் தேவர்கள் என்று அழைக்கின்றவர்கள் உண்டு, ஆனால் "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது'' (1 கொரி. 8:6). பரலோக பிதாவின் சொந்தப் பெயரானது யாத். 3:15ல் அமைக்கப்பட்டுள்ளது: "... கர்த்தர் [YHWH] ... என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறை தோறும் இதுவே என் பேர்ப் பிரஸ்தாபம்." "YHWH" என்ற இந்த நான்கு எழுத்துக் கொண்ட சொல்லைத் தேவன் எப்படி உச்சரித்தார் என்பது அறியப்படுவதில்லை, ஆனால் அவற்றின் அர்த்தமானது என்றென்றும் பிரகாசிக்கின்றது. (மொழி யிலக்கண நுணுக்கத்தில் இது "Tetragrammaton" அதாவது, "நான்கெழுத்துச் சொல்" எனப்படுகின்றது.)

இதன் உச்சரிப்பானது "Yahweh" (யாவே) என்றிருந்தால், அது "அவர் இருத்தலுக்குக் காரணமாகின்றார்" என்று அர்த்தம் தரும், இது தேவனு டைய படைப்பின் வல்லமையை அறிவிப்பதாக அமையும். இப்படிப் பட்டவர் ஒருவர் இருக்கின்றார் என்பதற்காக நாம் எவ்வளவு நன்றி யுள்ளவர்களாயிருக்கின்றோம்! நாம் உயிருடனிருப்பதில் மகிழ்வடைகின் றோம், மற்றும் அவரது படைப்பின் வல்லமையின்றி நாம் உயிருடன் இருக்க முடியாது என்று அறிகின்றோம். "அநாதி தேவனே [நமக்கு] அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் [நமக்கு] ஆதாரம்" (உபா. 33:27).

அந்த நான்கெழுத்துக்களின் உச்சரிப்பானது "Yehweh" (யெவே) என்றிருந்தால், அது "அவர் தொடர்ந்து இருக்கின்றார்" என்று அர்த்தம் தரும், இது அவரது முடிவற்ற தன்மை மற்றும் அவரது சுயநிறைவு மற்றும் அவரது சுயாதீனமான தன்மை ஆகியவற்றை அறிவிப்பதாக அமையும். "என்னைத் தவிர தேவன் இல்லை'' (ஏசா. 44:6); "நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்'' (சங். 90:2). எல்லைக்குட்பட்ட நமது சிந்தைகளினால், அவர் எப்படி இருக்க வந்தார் என்று விளக்குவது இயலாததாக உள்ளது (எபி. 11:6), ஆனால் அவர் இருந்தார், இருக்கின்றார் மற்றும் இருப்பார் என்பதனால் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களா யிருக்கின்றோம்! இல்லாமல் ஆகி விடமாட்டோம் என்பதில் நமது நம்பிக்கையானது அப்படிப்பட்ட ஒருவரைச் சார்ந்துள்ளது! அவர் தொடர்ந்து இருந்து நம்மில் அன்புகூருவாரென்றால், நாமும் நித்தியத்

திற்கும் இருப்போம் என்ற நம்பிக்கை உள்ளது, “நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்” (யோவா. 14:19).

வேதாகமத்தின்படி, மனித இனத்தில் தேவனுடைய சொந்தப் பெயரை முதன் முதலாக பேசியது ஏவாளே, அவள் காயீனின் பிறப்பை அறிவித்தாள்: “[நான்] கர்த்தரால் [YHWH] ஒரு மனுஷனைப் பெற்றேன்” (ஆதி. 4:1) என்றாள். அவளது பேரன் எனோஸ் YHWHன் நாமத்தைத் தொழுது கொள்ளத் தொடங்கினான் (ஆதி. 4:26). ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் பிறரும் “YHWH” என்ற பெயரைப் பற்றிப் பேசினர் (ஆதி. 14:22; 15:2; 24:27; 26:28; 27:27; 28:16; 30:24; 31:49), ஆனால் இவர்களில் யாரும் “YHWH” என்ற இந்த நான்கு எழுத்துக்களில் மூடி வைக்கப்பட்டிருந்த மாபெரும் அர்த்தத்தை அறிந்திருக்கவில்லை (யாத். 6:3ஐக் காணவும்). இந்த நான்கெழுத்துச் சொல்லின் தனிச் சிறப்பைத் தேவன், மனிதர்களில் முதன் முதலாக மோசேக்குத்தான் விளக்கப் படுத்தினார்: “இருக்கிறவராக இருக்கிறேன்” (யாத். 3:14). கர்த்தர் தம்முடைய சொந்த விரல்களினால், “உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்” (யாத். 20:7) என்று எழுதியபோது, பரிசுத்த நாமத்திற்கான பயபக்தி குறிப்பிடப்பட்டது.

“நாமத்தை” நிந்தித்த ஒரு மனிதன் (லேவி. 24:11, 16) கல்லெறிந்து கொல்லப்பட்டான். இந்த நிகழ்ச்சியிலிருந்து, ‘‘நாமமானது’’ மனித உதடுகளில் இருப்பதற்கு (கூடாத அளவு) மிகவும் பரிசுத்தமானதா என்ற சந்தேகம் எழும்பிற்று. இருப்பினும், கர்த்தர் தம்முடைய நாமத்தை உச்சரிக்கக் கூடாததாக்கவில்லை; அது பரிசுத்தமாய்க் காக்கப்பட வேண்டும் என்று மட்டுமே அவர் குறிப்பிட்டிருந்தார். அப்படியிருந்தும் கூட, பரிசுத்த வசனத்தில் “YHWH” என்ற பெயர் காணப்படும் ஒவ்வொரு இடத்திலும், ‘‘கர்த்தர்’’ [“LORD”] என்ற பெயரைப் பதிலீடு செய்யும் பழக்கத்தை எபிரெயர்கள் வளர்த்துக் கொண்டனர். இதன் விளைவாக, முன்பு நன்கு அறியப்பட்டதாயிருந்த தகுதியான உச்சரிப்பானது மனித அறிவிலிருந்து மறைந்துபோயிற்று. மோசேயிடம் அந்த நான்கெழுத்துச் சொல்லைத் தேவன் எவ்விதம் உச்சரித்தார் என்பதை இன்றைய நாளில் எவரொருவரும் அறிவதில்லை.

இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பிய போது, எல்லா மனிதர்களும் “பிதாவைக் கனம் பண்ணுவது போலவே குமாரனையும் கனம் பண்ண” வேண்டும் என்பதே பிதாவுக்குப் பிரியமாயிருந்தது, அவ்வாறு செய்யத் தவறுவதென்பது பிதாவைக் கனவீனம் பண்ணுதலாயிருந்தது (யோவா. 5:23). இதன் விளைவாக, இப்பொழுது - புதிய ஏற்பாட்டின் கீழ் - ஒவ்வொரு விஷயமும் ‘‘இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே’’ செய்யப்பட வேண்டியதாக உள்ளது (கொலோ. 3:17). “YHWH” என்ற பெயரானது கிறிஸ்துவின் யுகத்தில், ‘‘எல்லா நாமத்திற்கும் மேலான’’ (பிலி. 2:9) இயேசுவின் நாமத்தால் பதிலீடு செய்யப்பட வேண்டும் என்பது பிதாவின் நல்மகிழ்ச்சியாயுள்ளது.

புது யுகத்தில் முதல் நாளன்று, ஆவியினால் ஏவப்பட்ட பேதுரு

மனந்திரும்புதலையும் ஞானஸ்நானத்தையும் YHWH - ன் நாமத்தில் அல்ல ஆனால் "இயேசு கிறிஸ்துவின் நாமத்திலேயே" (அப். 2:38) கட்டளையிட்டார். சமாரியாவில் பிலிப்புவின் பிரசங்கமானது YHWHன் நாமத்தில் அல்ல, ஆனால் ''இயேசு கிறிஸ்துவின் நாமத்திலேயே'' (அப். 8:12) அமைந்திருந்தது. உண்மையில், நாம் இரட்சிக்கப்படுவதற்கு "வானத்தின் கீழெங்கும்'' மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கொடுக்கப்படவில்லை (அப். 4:12).

எபிரெயக் கல்வியாளர்கள் தேவனின் பெயரை "YHWH" என்று ஒலி பெயர்ப்புச் செய்வதற்கு முன்பு, அவர்கள் அதனை "JHVH" என்று எழுதினர். பல ஆண்டளவாக, அந்த வார்த்தையின் உச்சரிப்பானது பெரு முயற்சியுடன் தவிர்க்கப்பட்டு, அதற்குப் பதிலாக "LORD" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. அந்த வேளையில், 1518ல் பெட்ரஸ் காலிட்டினஸ் என்ற மனிதர் வார்த்தைகளை கலந்துருவாக்கும் கருத்தைக் கொண்டிருந்தார். அவர், ''கர்த்தர்'' என்பதற்கான எபிரெய வார்த்தையின் உயிர் எழுத்துக்களை எடுத்துக் கொண்டு அதை "JHVH" என்ற எழுத்துக்களில் உட்புகுத்தினார். "e," "o," மற்றும் "a" என்ற உயிரெழுத்துக்களை இந்த நான்கெழுத்துக்களிடையே வைத்த செயலானது முதன் முதலாக "Jehovah" என்று எழுதப்படக் காரணமாயிற்று. இன்றைய நாட்களில் பல நல்ல மனிதர்கள் "Jehovah" என்பது வேதாகம ரீதியான வார்த்தையல்ல என்பதை உணராதிருக்கின்றனர். இது 1518க்கு முன்பு கேள்விப்பட்டிராததும், மனிதனால் செய்யப்பட்ட ஒட்டு வேலையுமாயிருக்கின்றது.[1]

"அகில உலக வேதாகம மாணவர்கள்" என்றழைக்கப்பட்ட வழி தவறிய வைராக்கியமான பிரிவொன்று 1931ல் (ஓஹியோவின் கொலம்பஸில் நடந்த கூட்டமொன்றில்) தங்கள் பெயரை, "யெகோவாவின் சாட்சிகள்" என்று மாற்றிக் கொண்டது. அவர்கள் தாங்கள் வேதாகம ரீதியல்லாத பெயரொன்றைப் பயன்படுத்துவதை அறியாமல், ''யெகோவா'' என்ற பெயரை எல்லாப் பெயர்களுக்கும் மேலாக மேலான மரியாதையுடன் வழங்கத் தலைப்பட்டனர். அவர்கள் யெகோவா என்ற பெயரை இயேசுவுக்கும் மேலாக உயர்த்த நாடினர். "யெகோவா" என்ற பெயரானது கொணரப்பட்ட "YHWH" என்ற வார்த்தையானது பழைய ஏற்பாட்டில் சுமார் 6,823 முறைகள் தோன்றியிருப்பினும், புதிய ஏற்பாட்டில் இது ஒருமுறைக் கூடக் காணப்படுவதில்லை. யெகோவாவின் சாட்சிகள் வேதாகமம் முழுவதிலும் ஆர்வமுடையவர்கள் என்று உரிமைகோரிக் கொள்வதினால், புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர் யாரும் "யெகோவா'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தாமல் இருப்பது பற்றி அவர்கள் சங்கடம் அடைகின்றனர். அவர்கள் தங்கள் சொந்த வேதாகமத்தை மொழி பெயர்த்து, அதில் உள்ள புதிய ஏற்பாட்டில் ''யெகோவா'' என்ற வார்த்தையை 237 முறைகள் நாணமற்ற வகையில் உட்புகுத்தி அதன் மூலம் இந்தச் சங்கடத்திலிருந்து விடுபட்டுக் கொண்டனர்.

கிறிஸ்துவின் யுகத்தில் எல்லா மனிதர்களும் குமாரனைக் கனம் பண்ண வேண்டும் என்றே பிதாவானர் வேண்டுகோள் விடுக்கின்றார், அவரை இப்படிப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கைகளில் பிரியப்படுத்தப்பட

முடியாது. அவர் தாம் விரும்பிய வழிமுறையில் புதிய ஏற்பாட்டை எழுதச் செய்துள்ளார். தம்முடைய குமாரனுக்கு எல்லாவற்றிற்கும் முந்திய முதலிடம் கொடுத்துள்ளார் (கொலோ. 1:18). தேவன் இன்றைய நாளில் எல்லா மனிதர்களும் தங்களை ‘‘கிறிஸ்தவர்கள்’’ என்று அழைத்துக் கொள்வதன் மூலம் கிறிஸ்துவைக் கனப்படுத்த வேண்டும் என்று விரும்புகின்றார் (1 பேது. 4:16). ஒருவர் ‘‘கிறிஸ்து’’ என்ற பெயரை உச்சரிக்காமல் “கிறிஸ்தவர்” என்று உச்சரிக்க முடியாது. இப்பொழுது எல்லா மக்களும் “நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே” (எபே. 5:20) பிதாவாகிய தேவனுக்கு நன்றி செலுத்தும்படி கட்டளையிடப் பட்டுள்ளனர்.

குறிப்பு

[1]A. B. Davidson, *The Theology of the Old Testament* (New York: Scribner, 1926), 47. Petrus Galitinus was a confessor of Leo X.